**06.06.2023**
**OS 17/2022**
**வா.சா.1 புவனேஸ்வரி**
**குறுக்கு விசாரணை:-**

எனது அம்மா பெயர் அம்மாபொண்ணு என்றால் சரிதான். எனது அப்பா சப்பாணி அம்பலத்திற்கு இரண்டுதாரம் என்றால் சரிதான். முதல்தாரம் பொடிச்சி அம்மாள் என்றால் சரிதான். பொடிச்சி அம்மாளுக்கு குழந்தைகள் இல்லை என்றால் சரிதான். நானும், 2ம் பிரதிவாதியும் இரண்டாம்தாரமான அம்மாபொண்ணு மூலம் பிறந்தவர்கள் என்றால் சரிதான். நான் பொடிச்சி அம்மாளின் மகள் என்று சொல்வது தவறு என்றால் சரிதான். என் தகப்பனார் சப்பாணி அம்பலம் பிறந்ததிலிருந்து மதுரை மதிச்சியத்தில் குடியிருந்து வந்தார். என் தகப்பனாருக்கு மதுரை மதிச்சியத்தில் என் அப்பாவிற்கு பாத்தியமான சப்பாணி அம்பலம் காம்பவுண்டு என்ற பெயரில் 2-வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அதன் ஒரு பகுதியில் நான் இருக்கிறேன். மற்றொரு பகுதியில் 2ம் பிரதிவாதி குடியிருக்கிறார். அந்த சொத்துக்களை பிரித்துக்கொண்டுவிட்டோம். அது எனது அப்பா மூலமாக பூர்வீக பாத்தியமானது என்றால் சரிதான். அவ்வாறு நாங்கள் பாகம் பிரிக்கும்போது தாவா சொத்துக்களை நாங்கள் பாகம் பிரித்துக்கொள்ளவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து எனது அப்பா பெயரில் இருந்தது என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் உள்ளதா என்றால் இல்லை, அந்த ஆவணங்கள் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த வழக்கு சொத்து பொடிச்சி அம்மாள் பெயரில் கிரையம் மற்றும் பட்டா உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது அப்பா பொடிச்சி அம்மாள் பெயரில் வாங்கி கொடுத்தார். எனது அப்பா வாங்கி கொடுத்தது என்று எனக்கு நேரடியாகத் தெரியாது என்றால் தெரியாது. வழக்கு சொத்தை பொடிச்சி அம்மாள் 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த விவரம் 2020ல்தான் தெரியும். 2019வரை நெல் கொடுத்து வந்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ஆவணம் எதுவும் இல்லை. எனது அப்பா இறந்த பின்னிட்டு எனது அக்கா பாக்கியலெட்சுமிதான் அனுபவித்து வந்தார். வழக்கு சொத்திற்கு பட்டா, வரி ரசீது யார் பெயரில் உள்ளது என்றால் பாக்கியலெட்சுமிதான் செலுத்தி வருகிறார். நான் வழக்கு சொத்தை அனுபவித்து வந்ததாக சொல்லுவதற்கு ஆவணம் எதுவும் இல்லை. இது தவிர மற்ற சொத்துக்கள் எனது அப்பா பெயரில் உள்ளதா என்றால் பூர்வீக சொத்து உள்ளது. அதை பாகம் பிரித்துவிட்டார்கள். எனக்கு மேற்கேயும் அவர்களுக்கு கிழக்கேயும் பாகம் பிரித்துவிட்டார்கள். எனது பெயரில் பட்டா உள்ளது. அந்த பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை. நான் எனது அக்காவுடன் வழக்கு

தாக்கல் செய்வதற்கு சில மாதங்கள் முன்பிலிருந்து பேசவில்லை. மேற்படி சொத்து விவரம் தெரிந்த பின்னிட்டுதான் நான் எனது அக்காவுடன் பேசுவதில்லை. கடந்த 2 வருடமாகத்தான் பஞ்சாயத்து பேசி வருகிறோம். எனது அக்காவிற்கு எனது பெரியம்மா அவருக்கு பாத்தியப்பட்ட அவரது தாயார் வழி பாத்தியப்பட்ட சொத்தை 1ம் பிரதிவாதி கிரையம் கொடுப்பதற்கு அவருக்கு சட்டப்படி உரிமையுள்ளது என்றால் இல்லை. அதனடிப்படையில்தான் எனது அக்காவிற்கு சரியான பிரதிபிரயோஜனதிற்கு 1ம் பிரதிவாதி 03.02.2012ம் தேதி 2ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அப்போது எனக்கு தெரியாது. 2020ல்தான் எனக்குத் தெரியும். 2012ல் நாங்கள் அனைவரும் சந்தோசமாக இருந்த சமயத்தில் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு சொத்தை கிரையம் கொடுத்துள்ளார் என்றும், இந்த விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றும், வழக்கு தாக்கல் செய்வதற்கு ஏற்பட்ட காலதோஷத்தை சமாளிக்க மேற்படி வா.சா.ஆ.1 கிரைய பத்திரம் தற்போதுதான் தெரிய வந்தது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தில் எந்த காலத்திலும் தனியாகவோ, பொதுவிலோ உரிமை கொண்டாடவில்லை என்றால் சரியல்ல. நான் பொதுவில் இருந்ததாக காட்டுவதற்காக வருடத்திற்கு 10 மூடை நெல் கொடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார். 2ம் பிரதிவாதி வழக்கு சொத்தை அனுபவித்து வரும்போது 10 மூடை நெல் எனக்கு கொடுத்ததாக வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் எந்த விவரமும் பிராதில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு சொத்தில் நான் கூட்டு அனுபவத்தில் இருப்பதாக சொல்லி வழக்குரையை சரியாக மதிப்பிடாமல் உரிய நீதிமன்ற கட்டணம் தாக்கல் செய்யாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வழக்குரையில் என்னுடைய பாகத்தை சரியாக மதிப்பீடாமல் அதற்குரிய நீதிமன்ற கட்டணம் தாக்கல் செய்யாமல் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே நான் வழக்குரையில் கோரியுள்ள எவ்வித பாகப்பிரிவினை பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு சொத்து 1ம் பிரதிவாதிக்கு அவரது தாயார் மூலம் பாத்தியப்பட்ட பூர்வீக சொத்து என்றும், அந்த சொத்தை அவர் வா.சா.ஆ.1 படி 2ம் பிரதிவாதிக்கு உரிய பிரதிபிரயோஜனப்படி கிரையம் கொடுத்துள்ள நிலையில் அதைப் பொறுத்து நான் எவ்வித பரிகாரமும் கோர முடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமாக யார் பஞ்சாயத்து பேசினார்கள் என்றால் பூஞ்சுத்தி பஞ்சாயத்து தலைவர்

இராமநாதன் பேசினார். இன்னும் பலர் பேசினார்கள், அவர்கள் பெயர் ஞாபகமில்லை. சாட்சி முத்துபாண்டி, முனியாண்டி ஆகியோர் பேசியதாக சொல்கிறார்.

ஓம்:-S.கணேசன்
சார்பு நீதிபதி,
மேலூர்.